REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 13உ வெள்ளி (25—2—55) ★ ★ வெளியூர்: மாசி 14உ சனி (26—2—55) [இதழ் 218

தென்னாட்டிலிருந்து இலங்கை 1-லட்சம் டன் அரிசி வாங்கும்?

தென்னாட்டிலிருந்து கொழும்பு சர்க்கார், 1 லட்சம் டன் அரிசி வாங்குவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. டன்னுக்கு 37 முதல் 38 பவுன் வரை விலையில் மட்டச் சம்பா அரிசி வினியோகம் செய்ய ஏற்றுமதியாளர்கள் முன்வந்துள்ளதாகவும், டன்னுக்கு 37 பவுன் வீதம் 2,500 டன் அரிசி வாங்க இலங்கை சர்க்கார் ஏற்கனவே ஒப்புதல் தந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பாக். அகதிகளுக்கு வாழ்வா?

ஆயிரக்கணக்கில் ஆண்டவரிருந்தும் மக்கள் வாழ்வு தாழ்வுறுவானேன்?

பெங்களூர் மாநாட்டில் நெடுஞ்செழியன் முழக்கம்

"சென்னை மாநிலத்தில் மட்டும் கணக்கிற்கு வந்துள்ள மடங்கள் 164—தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் போன்றவை! கோவில்கள் 28,000—திருப்பதி, திருமலை, மதுரை, சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்றவை உட்பட! இவை அத்தனைக்கும் எத்தனையோ எண்ணற்ற வகையில் வருமானங்கள்—லட்சக்கணக்கான ஏக்கர் நில மானியங்கள்! இப்படி இந்த நாட்டில் ஆண்டவனுக்கு பக்தர்கள் காணிக்கை தந்திருக்கிறார்கள்; ஆனால், இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை என்ன?

"இந்த நாட்டில், கல்வி கற்றோர், 100-க்கு 17 பேர்தான் பாக்கி 83 பேர்கள் 'தற்குறிகள்'—'கைநாட்டு'ப் பேர்வழிகள்; இந்த நாட்டில்தானே கல்விக்கென்று ஒரு கடவுள்—சரசுவதி.

"ஆய கலைகள் அறுபத்திநான்கினையும் கற்றுத் தெளிந்த அந்த அம்மையார் கல்விக்கென கடவுளாயிருந்தும்—அந்த அம்மையை மனதில் எண்ணி, காலால் காகிதத்தை மிதித்துவிட்டாலே பாபம்—தவறு என்று கருதி, காகிதத்தை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொள்கிற அளவு மரியாதையும், பக்தியும் செலுத்துபவர்களாக மக்கள் இருந்தும்—இந்நாட்டு மக்களில் 100-க்கு 83 பேர் தற்குறிகளாயிருக்கிறார்களே, நியாயமா?

"வெளி நாடுகளில்—இப்படி கல்விக்கென ஒரு கடவுளே இல்லாத நாடுகளில்–100-க்கு 80 பேர், 90 பேர் படித்தவர்களாயிருக்கிறார்களே—எப்படி?

"அதேபோல, நம் நாட்டில் பொருளாதாரத்திற்கென ஒரு கடவுள் தனலெட்சுமி; ஆனால், நாட்டில் தரித்திரம் தாண்டவமாடுகிறது! இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்பவர்களின் சராசரி வருமானம், 365¼ நாட்களுக்கு 258 ரூபாய்; ஆனால் தனலெட்சுமி இல்லாத அமெரிக்காவில், அதே நாட்களுக்கு எத்தனையோ ஆயிரம் ரூபாய்கள்—எண்ணிப்பார்க்க வேண்டாமா, இது ஏன் என்று? எத்தனையோ ஆயிரம் கடவுளர்களுக்கும், பக்தர்கள், கோடிக்கணக்கான பணத்தைக் காணிக்கை செலுத்தியும், இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை இப்படி தாழ்ந்து இருப்பானேன்?"

—இவ்வாறு, 12—2—55-ம் தேதியன்று பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக சமூக சீர்திருத்த மாநாட்டில் பேசுகையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"தி. மு. கழகம் ஒரு விடுதலை இயக்கமென்பதும், சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் திராவிடர் சமுதாயம் அடக்கி வைக்கப்பட்டுக் கிடக்கிறதென்பதும் நாடறிந்த ஒன்றாகும்.

"சமுதாயத் துறையில் தி. மு. கழகம் விரும்புகிற மாற்றங்கள் யாவையும் என்னவென்பதை எனக்கு முன் பேசியவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"பழைமையை பழைமை என்பதற்காகவே தி. மு. கழகம் வெறுத்தொதுக்குவது கிடையாது; பழைமைக் கருத்துக்களிலும், இன்றைய சமுதாய வாழ்விற்குத்தேவையான அம்சங்களிருந்தால் அவற்றை நாம் எடுத்துக் கொள்ளத் தயங்கமாட்டோம்.

"கும்பமேளா என்ற ஒரு திருவிழா, பழைமையின் பெயரால்—மதத்தின் பெயரால்—கடவுளின் பெயரால் நடத்தப்படுகிறது; சாமியார்கள் நிர்வாணமாக ஊர்வலம் வருவதும், அதை லட்சக்கணக்கான மக்கள் கண்டு களிப்பதும் நாகரீகமானதா, அறிவுக்குப் பொருத்தமானதா என்பதை

(4-ம் பக்கம் பார்க்க)

உண்மையாகவா?

அண்மையில் மீண்டும் தாம் பதவியிலிருந்து விலகிவிடப் போவதாக அறிவித்திருந்த மத்திய சர்க்கார் வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், தமது முடிவை மாற்றிக்கொண்டு, தொடர்ந்து பதவியிலிருக்கப் போவதாக செய்திகள் அறிவிக்கின்றன.

தங்கக் கட்டிகள் தவறின?

அலகாபாத்—விந்தியாசல் ஆகிய இரயில் நிலையங்களுக் கிடையில் ஒரு பார்சல் எக்ஸ்பிரஸ் வண்டி வந்து கொண்டிருக்கும்போது ரூ.1,54,000 மதிப்புள்ள தங்கக் கட்டிகள் காணவில்லையென்று கூறப்படுகிறது.

எகிப்து படைக்கு 'முன்னெச்சரிக்கை?'

கெய்ரோ, பிப். 24—

துருக்கி — சிரியா எல்லைக்குள் துருக்கிப் படைகள் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன என்று கிடைத்த செய்தியின் பேரில், எகிப்திய இராணுவ தலைமைக் காரியாலய அதிகாரி ஒருவர், வரவிருக்கிற 'எந்த நிலைக்கும்' தயாராக இருக்குமாறு எகிப்து இராணுவத்திற்கு உத்திரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

★

திராவிட மொழி வழி மக்களின் பொதுமைப் பண்புகள்!

கன்னடிய மக்களுக்கு இரா. நெடுஞ்செழியன் தந்த விளக்கம்

பெங்களூர் அரசியல் மாநாட்டில் பேசிய தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் துறையில், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்று கோருகிறது.

"தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு திராவிட மொழி பேசும் மக்களும் மொழிவழி பிரிந்து, மாநில ஆட்சி வழி பிரிந்து, ஆனால் இனவழி ஒன்றுபட்டு, வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு வழி ஒன்றுபட்டு—டெல்லி ஏகாதிபத்திய எதிர்ப்பு வழி ஒன்றுபட்டு, தனித்து சர்வ சுதந்திரங்களுடனும் அமைத்துக் கொள்கிற திராவிடக் குடியரசு சோஷலிசக் கூட்டாட்சி நிறுவ வேண்டுமென விழைகிறது—தி. மு. கழகம்.

"இந்நான்கு மொழி பேசுகிற மக்களிடம் இருக்கும் பொதுமைப் பண்புகள், இந்தியாவில் வேறெந்த மொழி மக்களிடமும் இல்லாதவையாகும். தனிப் பண்பாடும், கலாச்சாரமும் கொண்ட இந்த நான்கு மொழி பேசும் திராவிட இனத்தவர் தனியாக வாழ வேண்டும்—டில்லியால் ஆளப்படுகிற நிலை கூடாது என்று கூறுகிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க.)

விரண்டோடி வரும் இலங்கைத் தமிழர்களுக்கு வாட்டமா?

'தூதுவரை நியமிப்பதில்கூட பண்டிதருக்கு அக்கறை காணோம்'

இந்திய பேரரசிற்கு டி. வி. கமலசாமியின் இடித்துரை

"இலங்கையில் உள்ள 8 லட்சம் இந்தியத் தமிழ் மக்களின் நிலை தொல்லை மிகுந்ததாக இருக்கிறது. இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்வதற்கான உடன்படிக்கை இந்தியப் பேரரசிற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டிருந்தபோதிலும், ஒருநாள் விடாமல் இலங்கை அரசாங்கம் பேசிவரும் வம்புப் பேச்சிலிருந்து, பெரும்பான்மை இந்தியர்களால் இலங்கை குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள முடியாது என நிச்சயமாகத் தெரியவருகிறது."

"இப்பிரச்சினையில் முடிவுகாண சிறிது நேரத்தை ஒதுக்குவது இந்தியப் பிரதமரின் கடமை இல்லையா? அவரோ, புதிய தூதுவரை நியமிப்பதைக் கூட பொருட்படுத்துபவராக இல்லை!"

குடியரசு தலைவர் பேச்சின் மீது நடைபெற்ற மக்கள் சபை விவாதத்தில் சென்னை மாநில உறுப்பினர் டி. பி. கமலசாமி மேற்கூறியவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் சொன்னார்:—

"நூற்றுக்கணக்கானவர்கள் இலங்கையிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்குச் செய்து தந்த வசதிகளைப்போல், இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் (தமிழர்களுக்கு) அவர்களுக்கும் வாழ்வு பெற வசதி செய்து தருவது இந்திய அர்சாங்கத்தின் கடமை அல்லவா?"

வறுமையையும் பசிப் பிணியையும் ஒழிக்கத் திட்டமாம்!

'சீட்டோ' நாடுகள் சித்தரிக்கும்?

பொருளாதார உதவித் திட்டமும் உருவாகும்?

'சீட்டோ' ஒப்பந்த நாடுகளின் அயல் நாட்டமைச்சர்கள், தென் கிழக்கு ஆசியாவை, கம்யூனிசப் பிடியினின்றும் பாதுகாத்துக் கொள்வதற்கான திட்டங்களையெல்லாம் பூர்த்தி செய்து விட்டார்களாம்.

வறுமை, பசிப்பிணி ஆகியவற்றை ஒழிப்பதற்கான பொருளாதார உதவித் திட்டம் மட்டும்தான் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் பாக்கியாக இருக்கிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற 'சீட்டோ' ஒப்பந்த நாடுகளின் மாநாட்டில், தென் கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்திற்கு எதிராக 'சீட்டோ' நாடுகளின் நடவடிக்கைகளை இணைத்து ஒருமுகப்படுத்த அதன் நிரந்தரத் தலைமைக் காரியாலயத்தை பாங்காங்கில் வைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

'சீட்டோ' தலைமைக் காரியாலயத்தில் 3 முக்கிய பிரிவுகள் செயலாற்றும்; ஒரு பிரிவான இராணுவப் பிரிவு, ஆயுதப் படையெடுப்பைத் தவிர்ப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்கும்; மற்றொரு பிரிவான சதி எதிர்ப்புப் பிரிவு, கம்யூனிஸ்டு ஏஜெண்டுகள் நுழைவதைத் தடுக்கும் வேலைகளையெல்லாம் ஒன்றாக இணைக்கும்; மூன்றாவது பிரிவான பொருளாதார உதவி பிரிவு, 'பசிப்பிணியை' எதிர்த்து நிற்க உதவி புரியும்.

இம்மாநாடு, அடுத்தபடியாக, 'சீட்டோ' ஒப்பந்த இடங்களில் கம்யூனிஸ்டுச் சதி வேலைகளை முறியடிப்பதற்கான திட்டங்கள் பற்றி பரிசீலனை செய்யுமாம்.

கம்யூனிஸ்டல்லாத ஏனைய ஆசிய நாடுகளில், ஊதியம் பெற்று வேலை செய்யும் கம்யூனிஸ்டு ஏஜெண்டுகளின் சதி வேலைகளைத் தடுக்க துப்பறியும் போலீஸ் தலைமைக் காரியாலயம் ஒன்றை அமைக்கலாமெனவும் யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாசக் கருவிகளுக்கு நீடூழியா?

சர்வதேச ரீதியில், அணுகுண்டு, நீர்வளிக்குண்டு, பரிசோதனைகளை தடை செய்ய வேண்டுமென்ற யோசனையை அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் எதிர்த்துள்ளார். இம்மாதிரியான 'யோசனைகளையெல்லாம் ஆலோசித்துவிட்டதாகக் கூறிய அவர், 'தனித் தனிப் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு, தனித் தனியாகப் பரிகாரம் தேடுவதால், பயனேதும் இராது,' என்று குறிப்பிட்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 25—2—1955 வெள்ளி

பேரூர் கட்டளை!

கோவைக்கடுத்துள்ள பேரூரில் சென்ற ஐந்து தினங்களுக்குமுன் கூடிய நமது கழகப் பொதுக்குழுவின் சிறந்த முடிவுகளில் ஒன்றைக் குறித்து நேற்று முன்தினம் விளக்கமாக எழுதியிருந்தோம். இன்று அதி முக்கியமான மற்றொரு கட்டளையைக் குறித்துச் சில கூறுகிறோம்.

தங்கள் உடலுழைப்பை மட்டுமே மூலதனமாகக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயத்திலிருக்கிற தொழிலாளர்களிடை, 'ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் பணி புரிந்து தொழிலாளர்களை ஒன்று திரட்டும்படிக்கும், தொழிற்சங்க அமைப்புக்கான சூழ்நிலை ஏற்படுவதை அவ்வப்போது தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்கு அறிவிக்கும்படி;யும்; நமது பொதுக்குழு கட்டளை பிறப்பித்திருக்கிறது. நமது கழகப் பணியின் திருப்புமுகமான ஒரு பெரும் மாற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது இது.

நமது கழகத்திற்கு தொழிலாளர்களின் நல்வாழ்வில் கருத்தும் கவலையும் அறவே கிடையாது என, நம்மைக் கொடிய விரோதிகளென கருதிக்கொண்டிருக்கிற பிற அரசியல் கட்சியினர், நம்மீது வெளிப்படையாகவே பழி சுமத்தி வந்திருக்கின்றனர். அவ்வபவாதத்திற்கு, குழு முடிவு, தக்க பதிலாக அமைந்திருக்கிறது. இத்துறையில் கழகத்தின் மீது பிற கட்சிகள் சுமத்திய குற்றச்சாட்டு எவ்வளவு அபத்தமானது என்பதையும் இத்தீர்மானம் அம்பலப்படுத்திவிட்டது என்பதிலும் ஐயமில்லை.

நமது கழகம் தொழிலாளர்களைப் புறக்கணிக்கிறது என பிற கட்சியினர் நம் மீது இதுவரை குற்றம் சாட்டி வந்தது, நமது பணியைத் தாழ்த்தி, தங்கள் பணியை அத்தியாவசியப் பணியாகக் காட்டிக்கொள்ளவும், அதே காலத்தில் நம்மைக் குறித்து கருத்துச் செலுத்துவதிலிருந்து தொழிலாளர்களை தங்கள் பக்கம் அல்லது வேறு பக்கம் திருப்பவுமே ஆகும். நமது கழகமும் இனி தொழிலாளர்களிடை பணி புரியப் போகிறது என்ற முடிவு, மேற்குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் கணிசமான மாற்றத்தை உண்டாக்கிவிடும். அதனால், நமது முடிவு ஏற்கனவே தொழிலாளர்களிடை பணி புரிந்துவரும் கட்சியினருக்கு அச்சத்தை மூட்டும்; நம் மீது ஆத்திரங்கொள்ளவும் அவர்களைத் தூண்டும்.

தொழிலாளர்களிடை இரு பிரிவினர் உண்டு. உதிரிகளாக இருந்து, கூட்டுறவு உணர்வற்று, சிதறிக் கிடந்து, தினப்படி மாடுபோல் உழைத்து வாழ்கை நடத்திவரும் தொழிலாளர்கள் என்றும், பொருளாதாரத் துறையில் மட்டுமே முற்போக்கு எண்ணங்கொண்டு, மற்றத் துறைகளில் பழைமைப் பிடிக்குக் கட்டுண்ட மாறு மனத்தினராக, கூட்டுறவு உணர்வுடன் சிறிய பெரிய ஆலைகளில் தொழில் புரியும் தொழிலாளர்கள் என்றும் இரு பிரிவினர் இருந்து வருகின்றனர். ஆலைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்துடன், சிதறிக்கிடக்கும் உதிரித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒவ்வொருவருக்கும் பிரம்மிப்புதான் ஏற்படும். இருசாராரின் வாழ்க்கைத்தரமும் என்றுதான் ஒரு நிலை பெறுமோ என்ற நினைப்பு ஒவ்வொருவரையும் மலைப்புறவும் செய்யும்.

ஆலைத் தொழிலாளர்களிடை, உற்பத்தி சாதனத்தின் உள்ளடக்கமாக உள்ள தத்துவத்தின் மூலம், ஏற்கனவே குறிப்பிடத்தகுந்த அளவில் கூட்டுறவு உருவாகி வளர்ந்து வந்திருக்கிறது. அந்த அரிய வாய்ப்பு உதிரித் தொழிலாளர்களுக்குக் கிடையாது; எனவே அவ்வுயர்ந்த பண்பாடும் அவர்கள் உள்ளங்களில் கால்கொள்ளாமல் இருந்து வருகிறது. இக்குறைபாட்டைக் களைந்து; உதிரித் தொழிலாளரிடம் கூட்டுறவு உணர்வை உருவாக்கி வளர்ப்பதை நமது கழகத் தோழர்கள் முக்கியப் பணியாகக் கொள்ளவேண்டும்.

ஆலைத் தொழிலாளர்கள். அவர்கள் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட தொழிலில் கிடைக்கிற பலன் அனைத்தையும் அனுபவிக்கிறவர்களாக இல்லை. தங்கள் ஒரு பகுதி உழைப்பில் கிடைக்கக்கூடிய சிறு பலனை பெற்றுத் திருப்தியடைய வேண்டிய ஒரு இழிநிலையில்தான் அவர்கள் இருந்து வருகின்றனர். அவர்களுடைய பெரும் பகுதி உழைப்பின் மூலம் உருவாகும் பலன் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரின் ஆடம்பர வாழ்விற்குப் பயன்பட்டு வருகிறது. வரியும், புதிய தொழில் துவக்கமும், பொதுப்பணியும் அப்பெரும் பலன் மூலம் பயன் பெறுகின்றன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

மேற்கூறிய தொழில் முறையை மாற்றி அமைத்தாக வேண்டும். அதுவே நமது கழகத்தின் நீண்டகால குறிக்கோள் என்பதை நாம் தொழிலாளர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். சிலரிடமே உள்ள உற்பத்திச் சாதனங்கள், தொழிலாளர்களாலேயே நிர்வகிக்கப்படும், தொழிலாளர்களே முழு பலனையும் பெற்று அனுபவிக்கும், தொழிலாளர்களின் பொதுச் சாதனங்களாக மாற்றி அமைக்கப்பட்டாகவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை தொழிலாளர்களுக்கு உணர்த்த வேண்டும்.

மற்ற கட்சியினர் தொழிலாளர்களிடை பணிபுரிவதற்கும், நமது கழகம் பணிபுரிவதற்கும் அடிப்படையிலேயே குறிப்பிடத்தகுந்த வேற்றுமை உண்டு. மற்ற கட்சியினர் அகில இந்திய—அகில உலகக் கண்ணோட்டத்தோடு தொழிலாளர்களிடை பணிபுரிந்து வருவதாகக் கூறிவருகின்றனர். இப்போக்கிலிருந்து நமது கழகம் பெரிதும் விலகி இருக்கிறது — அக்கருத்து இடம் பெறுவதற்கான காலம் இன்னும் வெகு தொலைவில் உள்ளது என்ற உண்மையினால், அந்நோக்கை ஒதுக்கவும் செய்கிறது.

திராவிட நாடு பெறுவது முகத்தின் குறிக்கோள். அக்குறிக்கோளின் இன்றியமையாமையையும், அதிலுள்ள நியாய பலத்தையும், தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர முயற்சியில் கழகத் தோழர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அதே நேரத்தில், அவர்களுக்குப் போதித்து: அவர்கள் ஆதரவை ஒன்று திரட்ட வேண்டும். இப்பணிக்குச் சாதகமாக உள்ள ஆதாரங்களையும் உலக வரலாற்று ஏடுகளிலிருந்து எடுத்துக்காட்ட வேண்டும்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்பது உயர்ந்த குறிக்கோளாகும். இதில் இரு கருத்து இருக்க நியாயமில்லை. அப்பெரும் உணர்வை ஒவ்வொரு தொழிலாளியும் பெறுவதற்கு, பல கட்டங்களை அவர்கள் கடந்து செல்லவேண்டி இருக்கிறது. 'உலகத்தவன்' என்ற உயர் நோக்கிற்கு, உலக வரலாறு, 'காலம்' எனும் ஒரு பலம் பொருந்திய கட்டுப்பாட்டை விதித்திருக்கிறது என்பதே, மேற்கூறிய கருத்தின் உட்பொருளாகும். எனவே, நமது உயிர் இலட்சியமான 'திராவிட நாடு' குறிக்கோளை தொழிலாளர் மக்களும் ஒப்புக்கொள்ளச் செய்யும் வகையில், அவர்களுடைய வாழ்க்கைப் போராட்டத்தில் நட்புறவுடன் பங்குகொள்ள கழகம் முன்வந்திருப்பதை, பெரும்பான்மையான தொழிலாளர்கள் மனமுவந்து வரவேற்று ஆதரிப்பர் என்பதில் துளியும் ஐயமில்லை.

அண்ணா-சம்பத் சுற்றுப்பயண நிகழ்ச்சி

கிராம மக்களின் மட்டிலா ஆர்வம்

பொதுச்செயலாளரின் வருகை தந்த எழுச்சி

ஈரோடு, பிப். 22—

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கோவை மாவட்டத்தில் செய்துவரும் சுற்றுப் பயணத்தையொட்டி நேற்று கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் வழியில், மாலை 4 மணி அளவில், கணபதி என்ற சிற்றூரில் உள்ள பகுத்தறிவுப் படிப்பகத்திற்கு வருகை தந்தார்.

அந்தக் குக்கிராமத்தில் ஏராளமான பொதுமக்கள் கழகப் பொதுச் செயலாளரைக் காணக் கூடியிருந்தனர்.

நாதசுர வாத்திய முழக்கத்துடன் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, கோவை மாவட்டச் செயலாளர் ஈ. வெ. கி. சம்பத் முதலானோர் வரவேற்கப்பட்டு, படிப்பகத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு படிப்பக வளர்ச்சி குறித்தும், கிராம மக்களின் நிலை குறித்தும் கேட்டறிந்துகொண்டு, படிப்பக நிர்வாகத் தோழர்களுக்கு பொதுச்செயலாளர் அவர்கள் அறிவுரை பகன்றார். அண்ணாருக்கு கைத்தறி துணி போர்த்தப்பட்டது.

தோழர்களின் ஆர்வத்தைப் பாராட்டிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள்.

பின்னர், அங்கிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள செவ்வான்பட்டி என்ற ஊரிலும் வரவேற்பு வழங்கப்பட்டது.

கிராமமெங்கும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமை முழக்கம் பொறிக்கப்பட்ட வரவேற்பு வளைவுகளும் கட்டப்பட்டிருந்த காட்சி கிராம மக்களிடையே கழக இலட்சியம் எழுப்பியுள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாயிருந்தன.

அங்கும், அந்தக் கிராமம் முழுவதுமே திரண்டு நின்று, பொதுச் செயலாளருக்கு வரவேற்பளித்தது.

பொதுச்செயலாளருக்கு கைத்தறி ஆடை வழங்கப் பெற்றது.

பொதுச்செயலாளர் அவர்கள், சில நிமிட நேரம் அங்கு கூடியிருந்தவர்களிடை பேசிவிட்டு விடை பெற்றுக்கொண்டார்கள்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும், குழுமியிருந்த மக்களின் ஆர்வத்தையும் எழுச்சியையும் பாராட்டிவிட்டு, வரவேற்புக்கு நன்றி கூறிக்கொண்டார்

★

மேட்டுப்பாளையத்தில் பொதுக்கூட்டம்

மேட்டுப்பாளையம் நகர தி. மு. கழகச் சார்பில், 21—2—55 திங்கள் மாலை 6 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் சண்முகநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்று தோழர் மா. சுப்பையா அவர்களை தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அடுத்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் அரியதொரு உரை நிகழ்த்தினார்.

இறுதியாக தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நீண்ட நேரம் சீரியதோர் கருத்துரை ஆற்றினார்.

பொதுச்செயலாளருக்கும், இ..ருக்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

பொதுச்செயலாளர் அவர்களும், இதாரும் உடனே புஞ்சை புளியம்பட்டிக்குப் பயணமானார்கள்.

★

புஞ்சை புளியம்பட்டி பொதுக்கூட்டம்

புஞ்சை புளியம்பட்டி தி. மு. கழகச் சார்பில் 21—2—55 திங்கள் மாலை 7-30 மணிக்கு ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு டாக்டர் அருணாசலம் தலைமை தாங்கினார்.

கழகச் செயலாளர் தோழர் சாமிநாதன் சிறிது நேரம் பேசியதும் தோழர் எஸ். அப்பாவு அவர்கள் நீண்டதோர் சொற்பெருக்காற்றினார்.

அடுத்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், சமூகசீர்திருத்த அரசியல் கருத்துக்களை வெகு தெளிவாக விளக்கிப் பேசினார்.

பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழக இலட்சியம்குறித்து சிறிது நேரம் பேசியதும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நீண்ட ஆரவாரத்திற்கிடையே சீரியதோர் பேருரை நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளருக்கு பல கழகங்கள், மன்றங்கள் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன், மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பின் இரவு 10-30 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

பஞ்சாயத்து சபை

வரவேற்பு

புஞ்சை புளியம்பட்டி பஞ்சாயத்து சபையினர் 21—2—55 அன்று இரவு 10-30 மணிக்கு, நகரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் முடிந்த பிறகு, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு ஒரு வரவேற்பும், தேனீரும் தந்து பெருமைப்பட்டுக் கொண்டனர்.

பஞ்சாயத்துச் சபைத் தலைவர் டி. ஒன்னப்பா அவர்கள் பொதுச் செயலாளர் அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்.

உறுப்பினர் ராஜா அவர்கள், பஞ்சாயத்து சபை சார்பில் வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளித்தார்.

அந்த வரவேற்பில், தி. மு. கழகம் நாட்டுக்குச் செய்துவரும் நல்ல பணியினைத் தாங்கள் உணர்ந்திருப்பதாகவும், பொதுச் செயலாளர் அவர்கள் திராவிடர் சமுதாயத்தின் உயர்வுக்காக உழைத்து வருவது கண்டு பெருமை கொள்வதாகவும் கூறியிருந்தனர்.

பொதுச் செயலாளர் அவர்கள் தமக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், நேரம் கழித்து வந்தமைக்காக வருத்தம் தெரிவித்துக்கொண்டார்.

"நீங்கள் வரவேற்பில் குறிப்பிட்டிருப்பதைப்போல, நான் ஆட்சிப் பொறுப்பினன் அல்ல; நான் உங்களை எல்லாம், 'எங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள்,' என்று கூற மாட்டேன்; மாறாக, நாங்கள் பரப்பிவரும் கொள்கைகளில் ஏதேனும் தவறுகள் இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், எங்களுக்குஅவற்றை எடுத்துக்காட்டி எங்கள் தவறுகளைத் திருத்துங்கள்,"

என்று, அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

இரவு 11 மணியாயிருந்தும்கூட, தாங்கள் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பிற்காக, பஞ்சாயத்து சபை உறுப்பினர்களும், ஊர்ப் பெரியவர்களும் காத்திருந்தனர். அந்த அகாலத்திலும் தேனீர் விருந்து நடத்தி மகிழ்ந்தனர். (ந. த. நி)

★

மண விழா

ஈரோடு நகர தி. மு. கழக செயற் குழு உறுப்பினரான தோழர் இரா. தேவராசன் அவர்கள்—தோழியர் க முத்துக்கண்ணு அவர்களை வாழ்க்கைத் துணைவியராக ஏற்றுக்கொள்ளும் திருமண விழா 23—2—55 புதனன்று காலை 10 மணியளவில் ஈரோடு பெரியார் நகர் மன்றத்தில் நடைபெற்றது.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமை தாங்கினார்.

மணமக்கள் இருவரும் முதலில் உறுதி மொழி பத்திரத்தை வாசித்து பின் மலர் மாலை மாற்றிக் கொண்டு துணைவர்களாயினர்.

அவர்களைப் பாராட்டி தோழர்கள் அ. பொன்னம்பலனார், முகவை-ஆர். எஸ். பாண்டியன், ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு ஆகியோர் சொற்பெருக்காற்றினர். முடிவுரையாக பொதுச் செயலாளர் அவர்கள் அறிவுரை பகன்றார்.

மணமக்களை, ஏராளமான நண்பர்களும், பல மன்றங்களும் வாழ்த்து மடல் வாசித்தளித்தும், பரிசுகள் வழங்கியும் மகிழ்வித்தனர்.

திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பு தரப்பட்டது.

★

குமாரபாளையம் பொதுக் கூட்டம்

ஈரோடு, பிப். 23—

குமாரபாளையம் தி. மு. கழகச் சார்பில் சந்தைப்பேட்டை மைதானத்தில் 22—2—55 அன்று மாலை

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை சட்டசபையில்....

★

பரிசீலனை எப்போது ?

"நெய்வேலி பழுப்பு நிலக்கரி எந்த அளவுக்குக் கிடைக்குமென்று தெரிந்த பின்னர்தான், சேலம் மாவட்டத்தில் உள்ள இரும்பு, அலுமினியக் கனிகளைப் பயன்படுத்தும் திட்டம் பரிசீலிக்கப்படும்," என்று அமைச்சர் கக்தவத்சலம் கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

"சேலத்திலுள்ள பாக்சைட் (அலுமினியம்), இரும்புக்கனி வளங்களைப் பயன்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், "சேலத்தில் இரும்புக்கனியும், செவ்வாய்ப்பேட்டையில் அலுமினியக் கனிகளையும் எடுத்து அபிவிருத்தி செய்ய நிபுணர்களின் பரிசீலனைக்கு ஏற்பாடு செய்யும்படியும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படியும் மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் சிபாரிசு செய்துள்ளது," என்றார்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அலுமினியக் கனிகளைப் பயன்படுத்தி தொழில் ஆரம்பிக்க, டால்மியா அனுமதி கோரினரா? அதற்கு சர்க்கார் மறுத்துவிட்டதா? அல்லது அந்த விஷயம் என்னவாயிற்று?" என்ற கேள்விக்கு, அமைச்சர், "இரண்டாண்டுகளுக்கு முன்பல்ல; அதற்கு முன்பு அந்த யோசனை ஏற்பட்டது; போதிய மின்சாரம் கிடைக்காத காரணத்தால், அந்த யோசனை கைவிடப்பட்டது," என்றார்.

"சேலத்தில் இரும்பு, அலுமினியக் கனி ஆகியவற்றை வர்த்தக ரீதியாக எடுக்க 'சர்வே' எடுக்கப்பட்டுள்ளதா? வட இந்தியாவில் இத்தொழில் ஏகபோகமாக இருக்க வேண்டுமென்பதற்காகவே, இத்திட்டத்தை சேலத்தில் அனுமதிக்காமல், மத்திய சர்க்கார் 'நாசம்' செய்கிறதா?" என்ற கேள்விக்கு, யாரும் 'நாச வேலை' செய்வது இப்பிரச்சினையில் எழவில்லை யென்றும், 'பூகர்ப்ப' ஆராய்ச்சி நடந்துள்ளதென்றும், இரும்புக் கனிகள் நன்கு இருப்பதாகத் தெரியவருகிறதென்றும், நெய்வேலித் திட்டத்தின் பலன் தெரிந்த பின்னர் இதைக் கவனிக்கலாம் என இந்திய சர்க்கார் இம்மாநில சர்க்காருக்கு தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினர்.

"இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த சேலம் சிறந்த இடம் என்று ரஷ்யத் தொழில் நிபுணர்கள் கூறியிருக்க, 'அது வெறும் தோற்றம்' என, மத்திய சர்க்கார் தொழில், வர்த்தக அமைச்சர் கூறியுள்ளாரே அது சரியா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர், ரஷ்ய நிபுணர்கள் கருத்துபற்றி தனக்கொன்றும் தெரியாதென்றும், பழுப்பு நிலக்கரியின் சாத்தியக் கூறுகள் தெரியும் வரை, இதை எடுத்துக் கொள்வது சாத்தியமில்லை என்றும் கூறினர்.

இயலாதாம்! முடியாதாம்!

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் ஆட்குறைப்பு சம்பந்தமாக மத்திய அரசாங்க தொழிலாளர் நல அதிகாரியிடமிருந்து சுரங்க அதிகாரிக்கு கடிதம் வந்துள்ளது என்றும், அக்கடிதம் சென்னை சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதால் அது பற்றிய விவரங்களைச் சபையில் தெரிவிப்பது பொதுநலனுக்கு உகந்ததல்லவென்றும் அமைச்சர் பக்தவத்சலம் உறுப்பினரொருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

"ஆள் குறைப்பு செய்வது, சுரங்கச் சட்ட விதி முறைக்கு விரோதமானதென்று மத்திய அரசாங்க அதிகாரி அந்த கடிதத்தில் கூறியுள்ளாரா?" என்ற கேள்விக்கு, உறுப்பினர் கூறுவது தவறு என்றும், அது பற்றிய விவரம் வெளியிட முடியாதென்றும் அமைச்சர் பதிலிறுத்தார்.

"மத்திய அரசாங்க அதிகாரி மாறுன கருத்து கொண்டிருப்பதால், தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வார்களா?" என்ற கேள்விக்கு, அமைச்சர், அபிப்பிராயபேதம் இருப்பதாக ஒப்புக்கொள்ள இயலாதென்றும், தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வதாக உறுதிமொழி அளிக்க முடியாதென்றும் கூறினர்.

முன் தொகையின்றி மின்சாரம்

விவசாய வேலைகளுக்காக முன்பணம் (டெபாசிட்) செலுத்தாத அளவில், விவசாயிகளுக்கு மின்சார விநியோகம் செய்ய முடியுமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மராமத்திலாகா மந்திரி கூறினர்.

ரத்து செய்ய உத்தேசம்?

"லோயர் எலிமெண்டரி கிரேடை ரத்து செய்துவிட்டு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களை மட்டுமே வைத்துக்கொள்வது என்ற உத்தேசம் சர்க்கார் பரிசீலனையிலிருக்கிறதென்றும், ஆனல் இந்த நோக்கத்தை உடனடியாக நிறைவேற்ற முடியாதென்றும், கொஞ்சம் அவகாசம் பிடிக்குமென்றும் நிதி அமைச்சர் அறிவித்தார்.

"சில ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில், அனுமதி முறை, சில எம். எல். ஏ.-க்களின் சிபார்சுகளைப் பொறுத்ததாக இருக்கிறதே," என்று பொதுப்படையாகக் கூறப்பட்ட புகார்களுக்கு, அமைச்சர் பதிலளிக்கையில், இத்தகைய புகார்களுக்கு ஆதாரமில்லை யென்றும், எனினும், ஏதாவது குறைகளிருந்தால் வரும் ஆண்டில் கவனித்து குறைகளை நீக்குவதாகவும் குறிப்பிட்டார்.

"இம்மாதிரியான புகார்களுக்கு இடமின்றிச் செய்வதற்கு, இந்தப் பயிற்சி பள்ளிகளுக்கு எஸ். எஸ். எல். சி. படித்தவர்களை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்," என்ற யோசனையும் கூறப்பட்டது.

புகாரும்—மறுப்பும்

திருத்தணிக்கு 3 மைல் தூரத்திலுள்ள இச்சிபுத்தூர் கிராமத்தில் பிப். 10-ந் தேதியன்று இரு அரிசனத் திருமணங்கள் நடைபெறவிருந்தபோது, போலீசார் தலையிட்டு, திருமணத்தில் சம்பந்தப்பட்டவர்களை நான்கு மைல் தூரத்திலுள்ள போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று நன்னடத்தை ஜாமீன் கட்டுமாறு வற்புறுத்தியதாகவும், நாடகத் தடை மசோதாவை துஷ்பிரயோகம் செய்து, நாடகமொன்றைத் தடுத்ததாகவும் அரிசன உறுப்பினரொருவரால் புகார் செய்யப்பட்டது.

இந்தப் புகார்கள் சரியல்லவென்றும், 1946 முதல் இக்கிராமத்தில் ஜாதி இந்துக்கள்—அரிசனங்களிடையே தகராறு இருந்து வருவதாகவும், 1952—55ல், 30 அரிசனங்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு 15 பேர் தண்டிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறி, மேலும் சொன்னர்:—

"10—2—55ல், வழக்கில் சம்பந்தப்பட்ட குடும்பத்தில் இரு திருமணங்கள் நடந்தன; "யார் துரோகி" என்ற நாடகம் அன்றிரவு நடிக்கப் போவதாக அழைப்பிதழில் காணப்பட்டது; இதர சமூகத்தினரை அவமதிக்கும் வகையில் அதை நடத்தப் போவதாகக் கூறப்பட்டதால், நாடகத்தால் கலவரம் ஏற்படுமெனக் கருதி, ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப்-இன்ஸ்பெக்டர், நான்கு கான்ஸ்டபிள்கள் அங்கு சென்று, திருமணத்தை மட்டும் நடத்துமாறும், நாடகத்தை நடத்தவேண்டாமெனக் கூறி, கலவரம் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டனர்."

உத்தரவு உண்டா?

"சர்க்கார்இலாகாசெயலாளர்கள் தங்களுக்குச் சொந்த குமாஸ்தாக்களாக பெண்களை நியமித்துகொள்ள வேண்டுமென அரசாங்கம் ஏதாவது உத்தரவைப் பிறப்பித்துள்ளதா?" என்ற கேள்விக்கு அமைச்சர், "ஒரே ஒரு செயலாளர்தான் பெண் குமாஸ்தாவை நியமித்துக் கொண்டிருக்கிறார்," என்றார்.

மூடிவிட முடிவு!

"நெல்லை சேமித்து வைத்துள்ள தங்கள் கிடங்குகளை மூடிவிட சர்க்கார் முடிவு செய்துள்ளது உண்மையே," என்று விவசாய மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலிறுத்தார்.

வழங்கப்பட்டது எவ்வளவு?

1954-ல், தஞ்சை மாவட்டத்தில், மனைக்கட்டுகள் கோரி, அரிசனங்களிடமிருந்து 950 மனுக்கள் வந்ததாகவும், இதில் 410 மனைக்கட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாவும் அமைச்சர் பரமேசுவரன் கூறியுள்ளார்.

செய்திச் சுருள்

★

நிலக்கோட்டை தி. இ. மு. கழக 5-வது ஆண்டு விழா

6—2—55 மாலை 6½ மணியளவில் வ. உ. சி. திடலில் தோழர் மு. வசனப்பித்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தோழர்கள் வ. பாஸ்கரன், பரமசிவம் ஆகியோர் பேசியதும், தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் சம்பத் அவர்கட்கு வரவேற்பிதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. பல ஊர்களிலுள்ள கிளைக் கழகங்கள் சார்பில் கைத்தறித் துணிகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன. தோழர் சம்பத் அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும், ஆவடி மாநாட்டில் தமிழ், தமிழகம் அவமதிக்கப்பட்ட அலங்கோலத்தையும் விளக்கி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

முத்துப்பேட்டை இரயில் பிரயாணிகள் சங்கம்

7—2—55 மாலை டாக்டர் திரு. டி. என். சிவசங்கரன் இல்லத்தில், தோழர் என். ஏ. பழனிவேலு தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் அவசரக் கூட்டத்தில், 17—2—54ல் நடைபெற்ற சங்கக் கட்டிடத்தில் நிறைவேறிய 5-வது தீர்மானப்படி வண்டிக்குப்போதிய வருமானம் ஏற்படும் என்று உத்தரவாதம் அளித்தும்கூட அதற்குப் பாதகமாக ஏமாற்றம் அளிக்கும் வகையில் காணப்பட்ட இரயில்வே ஜெனரல்–மானேஜரின் கடிதம் கண்டு வருத்தம் தெரிவித்துக் கொள்வதாகவும், முத்துப்பேட்டை இரயில்வே நிலையத்தில், பிரயாணிகள் தங்குவதற்கு வசதியும், பெண்கள் தங்குவதற்கு தனியாக அறைகளும் கட்டித்தரவேண்டுமென்று இரயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெடுஞ்செழியன் படிப்பகம்

சோழவந்தான் மேற்கு வட்டார நெடுஞ்செழியன் படிப்பக செயற்குழு கூட்டம் 7—2—55-ல் வீ. இராவணன் தலைமையில் நடைபெற்றபோது படிப்பக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: சு. துரைச்சாமி; துணைச் செயலாளர்: வீ. நடராசன்; பொருளாளர்: அன்புதம்பி; விளம்பர உறுப்பினர்: ச. செல்லம். பின்னர், வரவு-செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் விரைவில் படிப்பகத்தின் ஆண்டு விழா நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

'புரட்சிப் பெண்'—நாடகம்

12—2—55ல், கணியூரில் அர்ச்சுனன் கலா மன்றத்தாரால், இ. ரா. சு. வின் 'புரட்சிப் பெண்' நாடகம் தோழர் கே. ஏ. முருகேசம் தலைமையில் நடைபெற்றது.

தூத்துக்குடி ஆர்வி மில் கூட்டுறவு பண்டகசாலை

4—1—55ல் நடைபெற்ற மேற்படி பண்டக சாலையின் நிர்வாகத் தேர்தல் பலத்த போட்டியுடன் நடைபெற்றது. மில் தொழிலாளர் சங்கம் 5 பேர்களை நிறுத்தியது: தொழிற் சங்கத்தை எதிர்த்து கம்யூனிஸ்டுகட்சி போட்டியிட்டது.

ரூ. 10 லட்சத்திற்கு வியாபாரம் நடக்கும் — மில் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு, தோழர் கே. வி. கே. சாமி செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சொற்பயிற்சி மன்றம் துவக்கம்

பறம்புக்குடி தி. மு. க. கிளையின் சார்பாக 6—2—55ல், தோழர் மதியரசு தலைமையில் சொற்பயிற்சி மன்றம் துவக்கி வைக்கப்பட்டு மன்ற நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ஜீவதாசன்; துணைச் செயலாளர்: பெ. வழுதி. தோழர்கள் தில்லை போஸ், பெ. வழுதி ஆகியோர் 'நாடும் மொழியும்,' 'தமிழ்மொழி' என்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

தேனீர் விருந்தளிப்பு

6—2—55 பகல் 12 மணியளவில், பம்பாய் (மாதுங்கா) அழகிரி சொற் பயிற்சி மன்றச் சார்பில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், அழகுமுத்து, அமிர்தம் ஆகியோருக்கு மன்றச் சார்பில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர் சி. த. மு. இரா. ஆரியசங்காரன் தலைமை தாங்கினர். பின்னர் தோழர் டி. கே. சீனிவாசன், அழகமுத்து, அமிர்தம் ஆகியோர் அரிய சொற்பொழிவுகளாற்றினர்.

சைக்கிள் சாதனை

புழல் (ரெட் ஹில்ஸ்) தி. மு. கழகத் தோழர் என். பாலசுந்தரம் கடந்த 11—2—55 காலை 4 மணியிலிருந்து, 13—2—55 மாலை 6 மணிவரை மொத்தம் 60 மணி நேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்தார். மாதவரம் கழகத் தோழர் ஏ. ஜெயராசு, மாதவரம் தி. மு. கழகச் சார்பில் தோழர் பாலசுந்தரத்திற்குக் கைத்தறித் துண்டும் மலர் மாலையும் அணிவித்தார். அவரது சைக்கிள் திறனைப் பாராட்டி தோழர்கள் டி. பி. ஏழுமலை எம்.எல்.ஏ., பெ. த இன்மொழி, எம். கணபதி ஆகியோர் பேசினர்.

தெ. இ. ஆதிதிராவிட மகாஜன சங்கம்

12—2—55-ல், பம்பாய்—தாராவியில், தோழர் தி. சு. மாடசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர், சங்கத்தின் மாதக் கணக்குகள், மற்றும் கடிதப் போக்குவரத்துக்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

மதுரை திராவிட மறுமலர்ச்சி மன்றம்

தோழர் சி. குருசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், விருதை தோழர் எம். எஸ். பெரியசாமி, தோழர் கண்ணதாசன் தந்தையார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், மூன்று பேரும், அதற்குக் குறைவாகவும் வேலை பார்க்கும் கடைகளுக்கு, கடைச் சிப்பந்திகள் சட்டத்திலிருந்து விதி விலக்கு செய்திருப்பதை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானிக்கப்பட்ட பின்னர், தோழர் சி. குருசாமி செயலாளராகவும், தோழர் வெ செல்வம் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எது உண்மை?

"கடந்த 11—2—55ல் வெளிவந்த 'சுதேசமித்திரன்' இதழில், 'தண்டலை வட்ட கம்யூனிட்டு விவசாய சங்கத்தைச் சேர்ந்த 60 பேர்கள் (ஆண்-பெண் உட்பட) மேற்படி சங்கத்திலிருந்து விலகி காங்கிரசில் சேர்ந்துவிட்டார்கள்' என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறுன செய்தியாகும்.

"தண்டலை வட்டம் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 52 பேர்கள் (ஆண்-பெண் உட்பட) கம்யூனிஸ்டு விவசாய சங்கத்திலிருந்து விலகி, அம்மையப்பன் தி. மு. கழகத்தில் 2—2—55ல் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள்; இதுவே உண்மையான செய்தியாகும்" என்று அம்மையப்பன் தி. மு. கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

திருச்சி பீடி—சுருட்டு தொழிலாளர் கூட்டம்

மேற்படி தொழிற்சங்க உறுப்பினர்களின் கூட்டம், 12—2—55 மாலை 6-மணிக்கு பெரிய சவுக்கில் தோழர் ஐ எம். ஷரீப் தலைமையில் நடைபெற்றபோது, மார்ச் மாதம் திருச்சிக்கு வர இருக்கின்ற முதலமைச்சரை, சங்கச் சார்பில் சந்தித்து தொழிலாளர்களின் குறைகளைப் பற்றி ஒரு மகஜர் கொடுப்பது என்றும், 27–2–55ல், திருச்சியில் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

திருக்குறள் மாநாடு ஆலோசனைக் கூட்டம்

வேலூரில் 13—2—55 பகல் 11 மணிக்கு, தோழர் சாதா அவர்கள் முன்னிலையிலும், தோழர் வே. அ. இளஞ்செழியன் தலைமையிலும் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், மாநாட்டை மார்ச்சு மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு மாநாட்டு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது:—தலைவர்: ஆ. மணி எழிலன்; செயலாளர்கள்: வே. அ. இளஞ்செழியன், அ. கருத்தோவியன். குழு உறுப்பினர்களாக மாவட்டத்திலுள்ள சில முக்கியஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போடிநாயக்கனூரில் இ. தி. மு. கழகம்

15–2–55-ல், இவ்வூரில், இளைஞர் தி. மு. கழகம், தோழர் சென. பாண்டியன் தலைமையில் நிறுவப்பட்டு கீழ்க்கண்ட நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: க பரமசிவம்; துணைச் செயலாளர்: எஸ் ராஜா; பொருளாளர்: ஆ. தியாகராசன்; விளம்பர உறுப்பினர்: என். டி. மணவன்; செயற்குழு உறுப்பினர்கள்: சின்ன குருசாமி, பொ. குருசாமி, ச. வ. சௌந்தர பாண்டியன், மா. இராமகிருட்டிணன், இரா. பாண்டியன், கே. ஏ. வேலப்பா, அ. பாண்டியன்.

'பலி பீடம்'—நாடகம்

15—2—55 இரவு 8½ மணிக்கு நடைபெற்ற கோபிசெட்டிபாளையம் பகுத்தறிவு நாடகக் கலைமன்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் தோழர் பொன்னுசேதுராமன் எழுதிய 'பலி பீடம்' என்னும் நாடகத்தை விரைவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

சென்னை—இராயபுரம் இளைஞர் நற்பணி மன்றம்

20—2—55 காலை 10 மணியளவில், தோழர் ஜே செல்வராசன் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், தலைவர் தமது தலைமையுரையில், கழகம் எப்படி இயங்க வேண்டுமென்பது பற்றிப் பேசினர். பின்னர், தோழர்கள் இ. முத்தரசன், மு. வெற்றிவேலன், முத்து, அம்பலவாணன், டி. ஆல்பர்ட், வி. கே. சாமி ஆகியோர் கடவுள், கடமை, கண்ணியம், நாட்டு நிலைமை, கலை, ஆளவந்தோர் ஆகிய பொருள்கள் பற்றிப் பேசினர்.

ஒரே நாகரீகம் கொண்ட ஐரோப்பா ஒன்ருகவா வாழ்கிறது?

திராவிடம் ஏன் தனியாக வாழக்கூடாது?

பெங்களூர் அரசியல் மாநாட்டில் சி.பி.சிற்றரசு திறப்புரை

"'திராவிட நாடு திராவிடருக்கே' — என்ற உரிமைக் குரல் இன்று நாளுக்கு நாள் வலுத்து வருகிறது; தமிழகத்திலே மட்டும் ஒலித்துக் கொண்டிருந்த இந்த உரிமை முரசு, கேரளத்திலும், ஆந்திரத்திலும், இன்று கன்னடத்திலும் ஒலிப்பதைக் காண்கிறோம்.

"திராவிடர்கள் ஒரு காலத்தே, உலகத்திற்கே நாகரீகம் கற்றுத் தந்தவர்கள்—என்ற பெருமை மிக்கவர்கள்; தம்மைப் பழித்த வடநாட்டு மன்னர்களை படையெடுத்து வென்று, அவர்கள் தலையில் கல்லேற்றி, கண்ணகிக்கு சிலை வடித்த வீர மரபினர்கள்—என்ற வரலாற்றைக் கொண்டவர்கள்.

"இப்படிப்பட்ட மக்கள் இன்று ஏன் வடநாட்டவர்க்கு அடிமையாயிருக்க வேண்டும்? என்றுமே அடிமைப்படாதவர்கள், இன்று அடிமைப்படுவானேன்?—என்ற கேள்வியைத் தான் தி. மு. கழகம் கேட்கிறது."

—இவ்வாறு, 13—2—55-ல், பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக அரசியல் மாநாட்டுத் திறப்புரை ஆற்றுகையில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் குறிப்பிட்டார்.

"அரசியல், பொருளாதாரத் துறைகளில், இந்த தென்னுட்டை வடநாடு எவ்வளவு அடக்கி ஆள்கிறது, ஆதிக்கம் கொண்டிருக்கிறது என்பதை நாம் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டி வருகிறோம்.

"ஆனல், 'இந்தியா ஒரே நாடு; எல்லோரும் ஒற்றுமையாய் வாழ வேண்டும்,'—என்று நமக்கு உபதேசிக்கிறார்கள்.

"உலகத்தில் வாழும் 240 கோடி மக்களும் ஏன் ஒன்ருக வாழவில்லை—வாழ முடியவில்லை? அதே காரணத்தினுல்தான், நாமும், 'வடநாட்டவருடன் ஒன்ருய் வாழமாட்டோம்,' என்கிறோம். உலகத்தில் வாழ்கிற அத்தனை மக்களும் பலப் பல நாடுகளாய் பிரிந்து வாழ்வதற்கான அதே காரணங்களால்தான், நாமும் — திராவிடர்களும் தனி நாட்டினராய் வாழ வேண்டும் என்று கூறுகிறோம்.

"ஒரே நாகரீகம் கொண்ட பல்வேறு நாடுகள், ஐரோப்பாவில் ஒன்ருக வாழ முடியவில்லையே! ஒரே மதம், ஒரே நாகரீகம், ஒரே வாழ்வு முறை கொண்ட ஐரோப்பிய மக்கள் ஏன் தனித்தனி நாட்டு மக்களாய் வாழ்கிருர்கள்? அப்படி இருக்கும்போது, அடிப்படையிலேயே முரண்பாடுபட்ட இருவேறு கலாச்சாரங்களைக் கொண்ட மக்கள் எப்படி இங்கு ஒன்ருக வாழ முடியும்?"

என்று கூறி தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், திராவிடர்கள் தங்கள் விடுதலையைப் பெறத் தாமதிக்கிற ஒவ்வொரு வினுடியும் அவர்களின் வாழ்வு குறைவுபட்டுப் போகிறது என்று எடுத்துக்காட்டி, வடநாட்டவர்கள், சாதாரண வியாபாரத்திலிருந்து பெரும் வர்த்தகத் துறைகளிலும், இன்னும் ஆட்சிப் பொறுப்பிலும் எத்தனை ஆதிக்கம் செலுத்துகிருர்கள் என்பதையும் விளக்கினர்.

கன்னட மக்களும் திராவிடப் பிரிவினையின் அவசியத்தை உணர்ந்து கொள்வதற்கு மாநாடு பயன்படுமென்று தாம் நம்புவதாகக் கூறி மாநாட்டினைத் திறந்துவைத்தார்.

போரில் ஈடுபடாதாம்!

"இராணுவரீதியில், சீனக் கரையோரத்திலுள்ள தீவுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் பிரிட்டன் ஈடுபடும் என்ற பிரச்சினைக்கு இடமேயில்லை," என்று பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் அறிவித்துள்ளார்.

பிரிட்டனிடமிருந்து எந்தவித இராணுவ உதவியையும், சீனக் கரையோர சம்பந்தமான தீவுகளைப் பாதுகாக்கும் யுத்தத்தில் எதிர்பார்க்கக் கூடாதென்று அமெரிக்காவுக்குத் தெரிவிக்குமாறு பிரிட்டிஷ் சர்க்காரைக் கோரும் தீர்மானம், தொழிற் கட்சி நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து பார்க்குமாறு அருமை பக்தகோடிகளை வேண்டுகிறேன்.

"மனிதனின் நேரம், நினைப்பு, உழைப்பு, ஆற்றல், அறிவு, செல்வம் அத்தனையையும்—வேண்டாத ஒன்றுக்காக வீண் விரயம் செய்வதுதான் கடவுள் பக்தியா என்று கேட்கிறேம்.

"நாம் கூறுகிறேம் — மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற, வளம் காண, கடவுளர்களும் அவர்களைக் காணுவதற்கெனக் கற்பிக்கப்பட்ட மதங்களும் பயன்படமாட்டா வென்று!"

"இராஜஇராஜசோழன், தஞ்சையில் மாபெரும் கோவில் எழுப்பினன்—பிரகதீசுவரருக்கு; அவனது பெயரைக் கூற—அவன் சந்ததி என்று கூறிக்கொள்ளக்கூட இன்று எவருமே இல்லையே? அவனைக் காட்டிலுமா நாம் கடவுளிடம் பக்தி காட்டிவிட முடியும்?

"ஆகவேதான் நாம், மனிதர்கள் தங்களின் பகுத்தறிவுக்கொப்ப, தங்கள் முயற்சிகொண்டு, தன்னம்பிக்கையுடன் வாழ முற்படவேண்டுமே தவிர, தாங்கள் வாழ ஆண்டவன் வழி வகுப்பான் என்றெண்ணுவது மடமைத்தனமாகும் என்று எடுத்தியம்புகிறேம்."

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில், கடவுள் தத்துவங்கள் மக்களின் சுயமுயற்சியை, ஊக்கத்தை எவ்வளவு குன்றிப்போகச் செய்திருக்கின்றன என்று எடுத்துக்காட்டி, 'எல்லாம் அவன் செயல்,' என்ற மூட நம்பிக்கையினுல் மக்கள் வாழ்வைப் பறிகொடுத்துத் தவிப்பதையும் சுட்டிக்காட்டி, சமூக முன்னேற்றத்திற்கான பகுத்தறிவு வாதத்தை ஆதாரங்களுடன் நிலைநாட்டினர்.

குமாரபாளையம்
பொதுக்கூட்டம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

7 மணியளவில் தோழர் சா. வெ. இராசண்ணன் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தோழர்கள் அ. பொன்னம்பலனுர், ஈ. வெ கி. சம்பத், பொதுச் செயலாளர் அண்ணுதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பொதுச்செயலாளருக்கும், இதர்களுக்கும் பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன. கூட்டத்திற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து பொதுச் செயலாளரின் பேருரை கேட்டு பயன்பெற்றனர்.

திராவிட மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் துணைக்கண்டம் முழுதும் ஒரே ஆட்சியில் இருக்கவேண்டும்—என்று கூறுகிறர்கள் காங்கிரசாரும், பிறரும்; ஆனல், இந்தியா, என்று ஒன்ருக இருந்தது? வெள்ளையரின் காலத்தில் கூட, இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் 582 சுதேச சமஸ்தானங்கள் இருந்திருக்கின்றன. அப்படி வெள்ளைக்காரர்கள் இங்கிருந்த எத்தனையோ நாடுகளை ஒன்று கூருக்கி, தன் ஆட்சியின் கீழ் துப்பாக்கியின் வலிமை கொண்டு அடக்கி ஆண்டுகொண்டிருந்தனர். அவர்கள் வெளியேறிய பிறகும் அவர்கள் அமைத்த எல்லைக்கோடுகள் அப்படியே இருக்க வேண்டுமென்பது என்ன நியாயம்?

"வெள்ளையர் மாநிலக்கோடுகளைக் கிழித்த நேரத்தில், மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அடிப்படையாக வைத்தா அமைத்தனர்? கிடையாதே! அப்படியானுல், இந்த எல்லைக் கோடுகள் நியாயமானவை, ஜனநாயகப் பண்பிற்கொத்தவை என எப்படிக் கொள்ள முடியும்?

"ஒரு நாட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்காகத்தான் அரசாங்கங்கள் அமைகின்றன.

"இப்போதுள்ள அரசாங்க அமைப்புப்படி—தென்னுடு வடநாட்டுடன் சேர்ந்துள்ள அரசியல் அமைப்புப்படி, இந்த நாட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை—பூர்த்தி செய்யப்பட முடியாது என்று கூறுகிறேம்.

"நமக்கு, 'உலகமே ஒன்ருக இருக்கக்கூடாதா,' என்ற ஆசை இருக்கலாம்; ஆனல், முடியவில்லையே! 96 அல்லது 97 பிரிவுகளாக — தனி நாடுகளாகத்தானே இருக்கின்றது உலகம்? அதற்குக் காரணம், அந்தந்த நாட்டு மக்கள், தங்கள் தங்கள் தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டித் தானே தனி நாட்டினர் வாழ்கிருர்கள்?

"அதே போலத்தான் நாமும் கோருகிறேம்—'தென்னுட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்,'—என்று!"

மேலும் தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், நாம் கேட்கும் திராவிடத்தின் மக்கள் தொகை 7½ கோடி என்றும், திராவிடர் தனியாக நின்றுல் உலக நாடுகளின் வரிசையில் 14-வதாக நிற்கும் என்றும், திராவிடத்தைக் காட்டிலும் எத்தனையோ ஆயிரம் மடங்கு கீழான வாழ்க்கை வசதிகளுள்ள நாடுகள் எல்லாம் எப்படி வாழ்கின்றன என்பதை எடுத்துக்காட்டி, 'திராவிடம் பிரிந்தால் என் வாழ முடியாது,' என்பதையும் புள்ளி விபரங்களுடன் விளக்கினர்.

அவர், திராவிட மொழிகளுள் நிலவும் ஒற்றுமை குறித்தும், இந்த மொழிகள் நான்கும் திராவிட இன மக்களின் மொழிகள் என்பதற்கான இலக்கியச் சான்றுகளையும் மேற்கோள் காட்டி, கன்னட மக்களின் எதிர்கால வாழ்வு திராவிடக் கூட்டாட்சியில்தான் சிறப்புற்றிருக்க முடியும் என்பதை விளக்கி, அவர்கள், திராவிடம் தனித்தியங்க தங்களின் முழு ஆதரவையும் தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

தெரிந்துகொள்ளுங்கள்!

இந்தியாவில் கடந்த 1953-54ம் ஆண்டில் 1,97,760 இலட்சம் உள்நாட்டு சிகரெட்டுகளும், 540 இலட்சம் வெளிநாட்டு சிகரெட்டுகளும், 47,18,63 100 உள்நாட்டு சுருட்டுகளும், 4,91,000 வெளிநாட்டுச்சுருட்டுகளும், 11,76,81,000 பவுண்டு பீடிகளும், 26,46,34,000 பவுண்டு மெல்லும் புகையிலையும் உபயோகிக்கப்பட்டனவாம்!

கழகக் கூட்டங்கள்

★

கோதைமங்கலம் (பழநி வட்டம்) அழகிரி திடலில்

26—2—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: அடிகள் சிவநேசம்

பேசுவோர்: டி. கே. சீனிவாசன், சிதம்பரனுர்

★

சென்னை காலடிபேட்டை, திருவொற்றியூர் சன்னதி தெருவில்

27—2—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: எம். கணபதி

பேசுவோர்: சி. பி. சிற்றரசு, வி. எஸ். கோவிந்தராசன்

★

பொன்னமராவதி

27—2—55 ஞாயிறு மாலை

தலைவர்: நல்ல. சுப்பையா

பேசுவோர்: க. அன்பழகன், நல்ல மணியன், முத்துக்கலிங்கன்

★

கட்டிமேடு கடை வீதியில் (சத்திரம் அருகாமையில்)

27—2—55 மாலை 5½ மணிக்கு

தலைவர்: பி. எஸ். ஏ. ரகீம்

பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ந. தருமலிங்கம், மு. அ. செங்குட்டுவன்

★

உடுமலைப்பேட்டை பிரேவோத் திடலில்

27—2—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ப. நாராயணன்

பேசுபவர்: சத்தியவாணிமுத்து

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

27—2—55 காலை 9 மணிக்கு சென்னை 18-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில், தி மு கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக வரவு-செலவு, மற்றும் பல முக்கிய ஆர்வேலைகள் பற்றியும் விவாதித்து முடிவெடுக்கப்படும்.

சென்னை 21-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

27—2—55 காலை 10 மணிக்கு; சென்னை 21-வது வட்ட தி மு கழகக் கட்டிடத்தில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

திருத்துறைப்பூண்டி தாலுகா தி. மு. கிளைக் கழக செயலாளர்கட்கு

27—2—55 மாலை 3 மணிக்கு திருத்துறைப்பூண்டி தாலுகா தி. மு. க-வின் 5-வது கூட்டம் கட்டிமேட்டில் மேற்படியூர் அண்ணு வீதியிலுள்ள தோழர் அ. ப. முகம்மது இல்லத்தில் தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி தலைமையில் நடைபெறும்.

மாயூரம் நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

27—2—55 மாலை 6 மணிக்கு. மாயூரம் நகர தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம், ரயிலடி தோழர் வி சுப்பையன் தையல் நிலையத்தில் நடைபெறும். அதுபோது, தி.மு கழகப் பொதுக் குழு முடிவுகள், ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள் பொதுக் கூட்டம் நடத்துதல் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

1954-ல், இந்தியாவில் 3,67,73,605 டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது.

வானெலியில் மீண்டும் சினிமா இசை!

அகில-இந்திய வானெலியில் மீண்டும் சினிமா இசையை ஒலி பரப்புவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்!

[சர்க்காரின் இம்முடிவினுல், இந்திய சலனப்பட சங்கத்தின் நிலைமை மாறவில்லையாம்; அகில 'இந்திய வானெலியில் பரப்புவதற்கு இசைத்தட்டுகளைத் தருவதில்லை,' என்ற அவர்களது முடிவு அப்படியே நீடிக்கிறதாம்.]

வானெலியில், திரையிட இசை தற்போது ஒலி பரப்பப்படாமல் இருப்பதற்கு திரைப்பட முதலாளிகளே காரணமென்றும், அகில-இந்திய வானெலி நிலையத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அவர்கள் திடீரென முறித்துக் கொண்டனர் என்றும் அரசாங்க அறிக்கை குறிப்பிடுகிறது.

இது சம்பந்தமாக, மீண்டும் திரைப்பட முதலாளிகளுடன் புதியதோர் ஒப்பந்தம் செய்து கொள்ள அகில-இந்திய வானெலி நிலையத்தார் முடிவு செய்துள்ளனராம்!

பொதுக் கூட்டம்

27—2—55 மாலை 5 மணிக்கு, திருவள்ளூரில், அழகிரி படிப்பகத்தின் சாரபில், தோழர் நாராயணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, டி. ஆர். வரதன் ஆகியோர் பேசுவர்.

டாக்டர் நடேசனுர் நினைவுக் கூட்டம்

27—2—55 காலை 8 மணிக்கு, சென்னை 8-வது வட்டம் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகக் கட்டிடத்தில் (எண் 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் ஏ. வி. ஆசைத்தம்பி தலைமையில் நடைபெறும். டாக்டர் நடேசனுர் அவர்களின் பொது வாழ்வைப் பற்றி தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவார்.

தியாகராயர் படிப்பகம்

27—2—55 காலை 9 மணிக்கு, மேற்படி படிப்பகத்தின்முன் (ஒர்க்ஷாப் ரோடு, மணிநகரம், மதுரை) தோழர் ஏ. எம். சாமி தலைமையில் மேற்படி படிப்பகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

அன்று மாலை 6-30 மணிக்கு, திலகர் திடலில், தோழர் பி. அறிவழகன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே சீனிவாசன், எஸ். முத்து ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

26—2—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ர. வளவன் தலைமையில், 'பொருளாதாரம்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

27—2—55 காலை 10 மணிக்கு, சென்னை 39-வது வட்ட தி மு. (கிளை) கழக கட்டிடத்தில், தோழர் பா. கலைஞன் தலைமையில் 'இன உணர்ச்சி' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

நீத்தார் இறுதிச் சடங்கு

"12—2—25 மாலை 6 மணிக்கு எனது தந்தை ஈ. கே. எட்சுமணன் அவர்கள் உயிர் நீத்தமை முன்னிட்டு, 27-2-55 காலை 8 மணிக்கு, எல்லாஸ்புரம் பாலாற்றங்கரையில் இறுதிச் சடங்கு நடைபெறும். அனைவரும் வரக் கோருகிறேன்," என, ஈ எல். ராகவன், எம்.எல்.ஏ. கேட்டுக்கொள்கிறர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, ராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம்.ஏ.